தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலகுவழி மாதிரிப் பரீட்சை - 02

ஆசிரியர் : P.அம்பிகைபாகன்
இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில்
குழு வகுப்புக்களில்

பாடலை வாசித்து வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

மீனினம் ஓடிப் பறக்குதும்மா – ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதும்மா
வானும் கடலாக மாறுதும்மா – இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதும்மா


(1) இப்பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி.
1) கடற்கரைக்காட்சி
2) நட்சத்திரங்களின் ஊடே சந்திரன் பவனி வரும் காட்சி
3) ஆகாயம் கடலாக மாறும் காட்சி
4) வெள்ளிக்கிழமைகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் காட்சி

(2) ஆகாயத்தை எதற்கு உவமையாக கூறப்படுகின்றது.
1) மீனினத்திற்கு 2) ஓடத்திற்கு 3) கடலிற்கு 4) வானத்திற்கு

(3) **கீழே தரப்படும் சொற்களுக்குச் பொருத்தமான ஒத்த கருத்துச் சொற்களை பாடலிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**
1) வள்ளம் - ..... 2) ஆகாயம் - .....
3) ஆழி - ..... 4) பெருமை - .....
5) அமிழுதம்மா - .....


வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் இரண்டு உருக்கள் ஏதொவொரு வகையில் ஒத்தவை. அவ்வுருக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(4) 
A B C (.....)


(5) 
A B C (.....)

அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன்மீதொன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவை வெற்றுக் கூட்டுக்குள் வரைக.

(6) 

(7) 

(8) **உருவில் உள்ள இரண்டாக்கப்பட்ட பெரிய ஒரு சதுரமுகியின் ஒரு முகத்தில் அடையாளம் இடப்பட்டுள்ள புள்ளிகள் வழியே வெட்டும்போது கிடைக்கும் கனவுருக்களின் எண்ணிக்கையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**



(.....)

(9) தரப்பட்டுள்ள கவிதையின் நான்கு வரிகளின் சரியான ஒழுங்குமுறையைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.

a) செக்கச் சிவந்து தெரிவதுண்டு
b) வேறுங் கடிகாரம் வேண்டுமோடி
c) சேவற் கோழியுண்டு காகமுண்டு வானம்
d) மேவும் பெண்ணே அதிகாலை தெரிந்திட (.....)

கீழுள்ள வினாக்களுக்கு அடைப்புக்குள் உள்ள பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.


(10) மனித உடலிற்குத் தேவையான உணவில் பெரும்பங்கு வகிப்பது.
(மீன்கள், இறைச்சிகள், தாவரங்கள்)

(11) தற்காலத்தில் தொடர்பாடலுக்கு பயன்படுவதில் பெரும்பங்கு வகிப்பது.
(கைத்தொலைபேசிகள், நிலத்தடி இணைப்புத் தொலைபேசிகள், தெருவோர தொலைபேசிக் கூண்டுகள்

(12) கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டை செல்லும் பாதையில் இருக்கக்கூடிய ஒரு நகரம்.
(கண்டி, காலி, புத்தளம்)

(.....)

(13) தரப்பட்டுள்ள உருவில் $\frac{4}{10}$ ஐ நிழற்றுக.




(.....)

(14) அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியை பின்னமாக எழுதுக.


(.....)

உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.


	இருந்து	வரைக்கும்	தூரம் km இல்
(15)	கொழும்பு	சிலாபம்	.....
(16)	சிலாபம்	புத்தளம்	.....
(17)	.....	அனுராதபுரம்	300




(18) உருவில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தி கீழுள்ள இலகு தூரம் காட்டி அட்டவணையைப் பூர்த்தி செய்க.



(19) முறிந்த கோடுகளினால் காட்டப்பட்டுள்ள மூன்று பாதைகளில் நீளம் கூடிய பாதையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.



(20) உருளை ஒன்றை உருவாக்க முடியாத அட்டைக் கீலத்தை தெரிவு செய்க.



கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் மூன்று வாக்கியங்கள் உள்ளன. அதில் ஒன்று கருத்து வேற்றுமை ஆனது. அதனைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

(21) 1) குமார் சகபாடியைச் சந்தித்தான்.
2) குமார் இணைந்து பாடியவனைச் சந்தித்தான்.
3) குமார் தன்னுடன் பாடசாலையில் ஒன்றாகப் படித்தவனைச் சந்தித்தான்.

(22) 1) நாடக மன்றத்தினர் தமது நாடகத்தை மற்றைய நாடகங்களுடன் ஒத்து உள்ளதாவெனப் பார்த்தார்கள்.
2) நாடக மன்றத்தினர் நாடகம் மேடையேற்றுவதற்கு முன் நடித்துப் பார்த்தார்கள்.
3) நாடக மன்றத்தினர் நாடகத்தை ஒத்திகை பார்த்தார்கள்.

23 ஆம் 24 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவுசெய்க.

(23) தொட்டிற்பழக்கம் சுடுகாடு வரைக்கும்.
1) தொட்டிலில் பழகிய பழக்கங்கள் மரணம்வரை தொடர்ந்து இருக்கும்.
2) தொட்டிலில் பழகிய பழக்கங்கள் மயானத்தில் விளையாடும்போதும் இருக்கும்.
3) தொட்டிலில் பழகிய பழக்கங்கள் மைதானத்தில் விளையாடும்போது இருக்கும்.

(24) ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
1) பழங்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சி விரைவில் ஆறிவிடும்.
2) கஞ்சியை குடிக்காது நீண்ட நேரம் வைத்திருந்தால் ஆறிவிடும்.
3) பிற்போடப்பட்ட காரியம் ஒருபோதும் நிறைவேறாது.

சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(25) பனை, தென்னையின் இளங்காய் குரும்பை என்பது போல மா, பலாவின் இளங்காயைக் குறிக்கும் சொல் யாது?
(.....)

(26) பயறு, உழுந்து முதலியவற்றின் உள்ளீடு பருப்பு என்பது போல் பலாப்பழத்தின் உள்ளீட்டுப் பொருள் யாது?
(.....)

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அறிவை விருத்தி செய்வதற்காக எமது பாடசாலையில் ஐந்தாம் தர மாணவர்களுக்கிடையில் பொது அறிவுப் போட்டி நடைபெற்றது அதில் .....

இச்சம்பவத்தின் மீதிப் பகுதியை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது. ஐந்து சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்.

(27) .....

(28) .....

(29) .....

30 தொடக்கம் 32 வரையிலான வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழே கோடிடுக.

A,B, C,D எனும் நால்வர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள் A யை விட 15 புள்ளிகள் கூடுதலாக B பெற்றதுடன் D யை விட C 10 புள்ளிகள் குறைவாக பெற்றிருந்தார். A யும் C யும் சமமான புள்ளிகள் பெற்றிருந்தனர். இதன்படி.

(30) நால்வரிலும் அதிக புள்ளிகளைப் பெற்றவர் யார்?
1) A 2) B 3) C 4) D

(31) குறைவான புள்ளிகளைப் பெற்றவர்கள் யாவர்?
1) AB 2) BC 3) CD 4) AC

(32) D என்பவர் 80 புள்ளிகள் பெற்றிருந்தாராயின் B என்பவர் பெற்ற புள்ளிகள் எவ்வளவு?
1) 75 2) 80 3) 85 4) 90

கோடிட்ட இடங்களுக்கு மிகப் பொருத்தமான பெயர்ச் சொற்களை வைத்து நிரப்புக.

(33) ..... பால் தரும்.

(34) ..... பால் கொண்டு வருகிறாள்.

(35) ..... பால் கொண்டு வருவார்கள்.

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(36) கிடைப்பதற்கு அரிதென்று கண்ட பொருளொன்றைப் பற்றிய எண்ணங்களை மறந்து விடுவது நன்று என்னும் கருத்தமைந்த பழமொழி.
1) எட்டாப்பழம் புளிக்கும்.
2) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
3) கிட்டதாயின் வெட்டென மற

(37) தொடர்ச்சியான பயிற்சி உயர்ச்சி தரும் எனும் கருத்தமைந்த பழமொழி.
1) சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.
2) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
3) சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது.

கருத்தினை தமிழில் எழுதுக.

(38) HAPPY NEW YEAR : .....

(39) WHAT IS YOUR NAME? : .....

(40) மம கீல என்னங். : .....